**பரமக்குடி நகராட்சி அலுவலகம்,**
**நாள்.29.08.2020**

**நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 31ம் நாள் (31.08.2020) காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்**

| | |
|---|---|
| பொருள்.1 | பரமக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஆகஸ்ட் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1241, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.2 | பரமக்குடி நகராட்சி பொறியாளர் அவர்களின் ஆகஸ்ட் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1242, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.3 | பரமக்குடி நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1243, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.4 | பரமக்குடி நகராட்சி சுகாதார அலுவலர் அவர்களின் ஆகஸ்ட் 2020ம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு<br><br>அலுவலகக்குறிப்பு –<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1244, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.5 | தமிழ்நாடு நகரியில் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் பயிற்சி நிலையத்திற்கு பரமக்குடி நகராட்சியின் 2020–2021 ஆம் ஆண்டுக்கான பங்குத்தொகை ரூ.50,000/– செலுத்தக் கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே கோவை பயிற்சி நிலையத்திற்கு மேற்கண்ட தொகை செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1245, அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்.6 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதார காம்பாக்டர் வாகனம் TN 65 AY 3116க்கு வருடாந்திர தகுதிச்சான்று 03.07.2020ம் தேதியுடன் முடிவடைவதாகவும், புதிதாக தகுதிச் சான்று பெறும் பொருட்டு, கீழ்க்கண்ட பழுது பணிகள் அனைத்தும் பார்த்து தருமாறு மேற்கண்ட வாகனத்தின் ஓட்டுநர் தெரிவித்துள்ளார். |

| வ.எண் | பழுதுப்பணிகள் விபரம் |
|---|---|
| 1. | Complete water wash |
| 2. | All wheel Grease Pakup and Bearing checkup |
| 3 | Engine Oil & oil Filter, Fuel Filter change |
| 4 | Gear box oil, Grown oil, Coolant oil change |
| 5 | Power Steering oil & Filter change |
| 6 | Air Filter Change |
| 7 | Renew Temper placer Rear Lock and Rubber mat, Renew handle, inner seat change |
| 8 | R&R All spring lea Recombining work and 1 No leaf Add |
| 9 | 12 Volte battery Assy |
| 10 | Master Slave cylinder change and Straight gear bot bed |
| 11 | Hydralic Oil Hose Check up |
| 12 | Complete Tinker work |
| 13 | Complete Painting work |
| 14 | Write letter work |
| 15 | Provide Sticker work |
| 16 | Complete Electrical Check up |

மேற்கண்ட பழுது பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு உத்தேச செலவினம் கணக்கிட Ashok Layland நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TV Sundram Iyyengar & Sons Private Limited, Manjoor, Paramakudi என்ற நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி கோரியதில் மேற்கண்ட நிறுவனம் ரூ.236390/–க்கு விலைப்புள்ளி அளித்துள்ளார்கள்.

எனவே பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும், திடக்கழிவு மேலாண்மையின் முக்கியத்துவம் கருதியும் ரூ. 2.50 லட்சம் உத்தேச செலவினத்தில் Ashok Layland நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TV Sundram Iyyengar & Sons Private Limited, Manjoor, Paramakudi என்ற நிறுவனம் மூலம் பழுது பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதிக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. ரூ. 2.50 லட்சம் உத்தேச செலவினத்தில் Ashok Layland நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TV Sundram Iyyengar & Sons Private Limited, Manjoor, Paramakudi என்ற நிறுவனம் மூலம் பழுது பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.1246, அனுமதிக்கப்பட்டது.**

தனிஅலுவலர்
பரமக்குடி நகராட்சி

பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.25.08.2020

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு ஆகஸ்ட் மாதம் 25ம் நாள் (25.08.2020) மாலை 04.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற சிறப்புக் கூட்டப் பொருள்</u>**

| | |
|---|---|
| பொருள் | பரமக்குடி நகரில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கிளை நூலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்வது தொடர்பாக முன்மொழிவுகள் அனுப்ப வட்டாட்சியர் பரமக்குடி அவர்கள் கடித ந.க. எண்அ1/16318/2017 நாள்.29.07.2020 ம் தேதிய கடிதத்தின் வாயிலாக கேட்டு கொள்ளப்பட்டது. பரமக்குடி நகரம் வார்டு .G பிளாக்.1, நகரளவை எண். 43/3 மொத்த விஸ்தீரணம் 0.2916.0 ச.மீ இடத்தில் 471 ச.மீ. அளவில் உள்ள இடம் நூலகத்துறைக்கு ஒதுக்கீடு செய்ய உள்ளதாக வட்டாட்சியர் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி இடம் சர்வே ஆவணங்களின் அடிப்படையில் சர்க்கார் புறம்போக்கு வேந்தோணி வரத்து வாய்க்கால் தாஸ்கோ அலுவலகம், மாணவர்விடுதி என பதிவுகள் உள்ளது. தற்போது மேற்படி இடத்தில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு, பொதுப்பணி துறை வருவாய் கோட்டாட்சியர் குடியிருப்பு, பொதுப்பணி துறை அலுவலர் குடியிருப்பு வேளாண்மை துறை அலுவலக கட்டிடம் ஆகியவை கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி புல எண்ணில் பயன்படுத்தப்படும் பகுதி போக மீதமுள்ள 471 ச.மீ. காலியிடத்தினை பயன்படுத்துவது தொடர்பாக மன்றத்தின் ஒப்புதலுக்கு<br><br>**அலுவலக குறிப்பு–**<br>பரமக்குடி நகரில் கிளை நூலகம் அமைக்க உத்தேசங்கள் பல ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. தற்போது மேற்படி நூலகம் செயல்பாட்டில் இல்லாத நிலையில் உள்ளது. பொதுமக்களின் நலன் கருதி கிளை நூலகம் பரமக்குடி நகரில் அமைக்க உள்ள அவசியமானதாகும். தேர்வு செய்யப்பட்டுள்ள வார்டு. G பிளாக் .1, நகரபுல எண். 43/3 இடம் பொதுப்பணித்துறையினருக்கு சொந்தமானதாக உள்ளது. தற்போது மேற்படி இடத்தில் அரசு கட்டிடங்கள் பல கட்டப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகையால் மேற்படி இடத்தில் நூலகம் அமைக்க பொதுப்பணித்துறை ஒப்புதல் பெற்று இடத்தினை பயன்படுத்த மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.<br><br>**தீர்மானம் எண்.1240**<br>நூலகம் அமைக்க பொதுப்பணித்துறையிலிருந்து ஒப்புதல் பெற்று மேற்கண்ட இடத்தை பயன்படுத்த மன்றம் முடிவு செய்யப்படுகிறது. |

தனி அலுவலர்
பரமக்குடி நகராட்சி